11

உ

சிவமயம்.

# ஐயனார் பதிகம்.



இஃது

கூளப்பாடி, தென்பாதி

பொ. பஞ்சநாத வன்னியர்
அவர்கள் இயற்றியது.

சேதியூர் மகா-ள-ள-ஸ்ரீ

மு. அருணசலபடையாக்ஷியால்

சிதம்பரம்
...லிலாஸ அச்சுக்கூடத்தில்
...கப்பட்டது:
...30

ஓ2998:41)
M30
176259



விநாயகர் வணக்கம்.

திருமாலும் பெண்ணாகச் சிவன்சுரத நீர் ததும்பத்
திருக்கை யேந்த
உருவான சாத்தன்மிசைச் செந்தமிழி னற்பதிக
மோதுதற்கு
ஒருமானைக் கரத்தினிலு மொருமானைச் சிரத்தினிலு
முடையான் முந்தித்
தருமானை முகத்தானைத் துதித்தவர் தன்னிருபதத்
தைத், தலைமேற் கொள்வாம்

## நூல்.

சீர்பெருகு சிரமதனில் நவமணி கிரீடமும்
திவ்யநீறணி நெற்றியுங்
செகமெலாம் விலைபெற்ற விருகாது குண்டலந்
திகழ்கருணை யிருவிழிகளும்
ஏர்பெறு கழுத்தினில் ருத்ராக்ஷ மாலையும்
இலங்குமா ருபவீதமும்
இருகையில் கத்தி கட்டாரிவாள் கேடயம்
எரிகதை நெடுஞ் சூலமும்
கார்பெருகு மிடையதனில் பட்டு பீதாம்பரங்
கச்சை சல்லடமு மிருகால்
கண்டாமணிச் சிலம்புங் கலீரென்றிடக்
காவலர்கள் புடை சூழவே
ஆர்பெருகு வெள்ளானை மேறியிவ் வுலகுதனை
யாதரித்திட வருகுவாய்
அரியரன் புத்ரனே ஐயனாரப்பனே
யருள் புரிவை யிதுசமயமே, 1

அரன் நாதமதுபொங்க திருமால் கரத்தேந்த
வப்போது குழவியாகி
ஐயனாரப்பனென திருநாமமே பெற்று
ஆயிரத்தெட் டண்டமும்.
திரமான பேய்பில்லி பூதவேதாளங்கள்
திரளான படையாக்கியே
தீர்க்கமா யாவையு மடக்கியரசாள்கின்ற
தேவனே சேவல் கொடியோய்

92903:417 N30

பரமான சோதியே திக்குவேறில்லையுன்
பாதமே தஞ்சமென்று
பத்தியொடு பாமாலை சூட்டத் துணிந்தவிப்
பாலகனை யாதரித்து
வரம்வேண தேதருக வெள்ளானை மீதேறி
வருகவிது வேளையையா
வாரணத் துவசனே ஐயனாரப்பனே
வரமெனக் கருள் செய்யவே 2
அண்டர்முனி முப்பத்து முக்கோடி தேவரும்
ஐராணி கேள்வன் முதலோர்
அவனியினி லடவிக்கு அரசாக்கி முடிசூட்டி
யவர்களு முனக்கு வசமாய்
எண்டிசையி லுள்ளதொரு பேய்பில்லி சூனியம்
இருசி காட்டேரி யிருளன்
இறுமாந்த பிர்ம்மராக்ஷசனொடு சடாமுனி
எரி கொள்ளி வாய்குறளியும்
மண்டியிட் டார்ப்பரித் திடுநொண்டி வீரனும்
மயான ருத்திரன் மாடனும்
மலையாள தேவதை சக்கமா தேவியும்
மற்றுமுள தேவதைகளும்
கண்டித்து நின்காவலுக்கு வசமாக்கியே
காணுண்ட மெய்த் தெய்வமே
கருங்குதிரை யேறியே யிங்குவந் தெளியரைக்
காத்தருள் செய்திடு மையனே
எண்ணுன்சு வாத்தியம் டுண்டு டுன் டுண்டென
இடியினைப் போன் முழங்க

எழிலான நாகசுர துத்தி புல்லாங்குழல்
    யிசையாக வூதிநிற்க
பண்ணான வெக்காள வெத்தி சின்னங்கள்பல
    பம்புபம் டம் பம் பென
பரத நாட்டியமாதர் பதநிசப பதநியென
    பாதங்களால் நடிக்க
எண்ணெணைப் படைவீரர் கத்திகட்டாரியுட
    னெங்குமே ஜெய ஜெயவென
எல்லைப் பழிக்குமெழில் மத்தாப்பு தீவட்டி
    யிருளினை விலக்கிவரவும்
விண்ணுடர் புகழுவே வெள்ளானை யேறியே
    விரைவுட னிங்கு வருவாய்
விமலனருள் புத்ரனே ஐயனாரப்பனே
    விந்தையுட னருள் புரிவையே 4

ஆதியு மனாதியா யண்டபகி ரண்டமாய்
    அணுவுமக மேருவாகி
அனல் புனலு காற்றுமாய் பிருதிவாகாசமாய்
    யாவுமா யெங்குமாகி
சோதிமுச் சுடருமாய் சூக்ஷாதி சூக்ஷச்
    சுகாதீத மெய்ஞ் ஞானமாய்
சுத்தசித்தாந்த வேதாந்த நாதாந்தமாய்
    தோன்றி நின்றிடு சத்தியை
பாதியிடமாகக் கொடுத்திட்ட வீசனின்
    பாலனென வருமையனே

பக்தர்களை ரக்ஷிக்க வெள்ளானை யேறியே
டவனிவந் தடியருக்கு
நீதியுப தேசித்து அஞ்ஞான[illegible]நீக்கி
நித்திய மெய்ஞ்ஞான மருளினாய்
நீறணியுமெய்யனே செண்டேந் துகையனே
நின்றெனக் கருள் புரிவையே 5

அஞ்செழுத்தே மௌன மந்திரத்தின் மகிமை
யாங்கார வோங்காரமாய்
அளவிலா வெகுகோடி சூக்ஷாதி சூக்ஷங்க-
ளறிவினுக் கெட்டாததாய்
வஞ்சப் பிறப்பிறப் பியாவையு மொழிக்க
நல்வழிகாட்டு மெய்யறிவுமாய்
வயங்குபல பேதங்களாய் நின்ற மந்திர
வகையுணர வறிவிலாது
நெஞ்சத் திருக்கியே கண்மூடி மௌனியாய்
நின்றுநெடு நாள்கழித்து
தின்கிருபை கிட்டாது கன்மவலையிற் சிக்கி
நெஞ்சுபுண்ணாகி நின்றார்
அஞ்சித் துதித்தனன் வெள்ளானை யேறியே
யாதரவு செய்ய விப்போ
தரியான் புத்ரனே ஐயனாரப்பனே
யடியவர்க் கருள் புரிவையே 6

தோடுகமழ் சந்தனங் கோங்குபுன்னை கொன்றை
தோகை மயிலாடு சோலை
தோய்த்திடுகவல்லி செந்தாமறைத் தடாகமும்
சுற்றுமதிலும் படிகளும்

காடுமணிமண்டபங் கதிரொளி பரப்புமெழில்
ககனளாவிய கோபுரம்
காணரியநின் கொலுவின் நிறைகொண்டபந்தியும்
காவலர் பணிந்து நிற்க
பாடுமடியவர்களிரு பாலு முன்னே நின்று
பாமாலை யாற்றுதிக்க
பஞ்சாக்ஷரப் பீடமேலிருந் தரசுசெய்
பரம சுந்தர விசாலா
ஆடுமயில் வாகனன் சோதரா வுன்பாத
பண்டிமேனனுண்மை யுண்மை
யரியரன் புத்ரனே யடவியா ளரசனே
யாதரித் தருள் புரிவையே 7

தொத்துநோய் ஊழியுங் காய்ச்சலுந் தலைவலி
தொடைவாளை யுங்குலைவலி
தொண்டைவலி மார்நோயிடுப்புவலி குன்மமுஞ்
சூலைவலி யுங்கிராணி
கத்துநோய் கைகால் முடக்குவா தங்களுங்
காமாலை யண்டவாதம
காசமுடனே கண்ட மாலையும் விப்புருதி
கன்னபுத் திருவிழியினோய்
பத்தித் கவிப்பவர்கள் உன் கோயில்வலம் வந்து
பணிகின்ற பேர்களுக்குன்
பஞ்சாக்ஷரஞ் சொல்லி வெண்ணீறு தூவிடப்
பருதிமுன் பனியாகுமே

இக்கருணை மெனையாள வெள்ளானை யேறியே
யிங்குவரவேணு மையா
ஈசன்மால் மைந்தனே ஐயனாரப்பனே
யென்றனக் கருள் புரியவே. 8

முந்திரக் காரருந் தந்திரக் காரரும்
மயானபலி யிடுவோர்களும்
மாரணந் தம்பனம் மோகன உச்சாடனம்
மயக்கி வசியஞ் செய்திட
என்றனொடு வந்தெதிர்த்திட்டபேர் தங்களி
னிருவிழியினைப்பிடுங்கி
பிடியிடி புடைபுடைத் தேயிழு படபடத்
தேக்கமிட் டலறியோட
வந்திடுங் குறளியும் ராக்ஷச சடாமுனி
மாடனுங் காட்டேரியும்
வனரக்ஷகாவென்று மனதினில் நினைக்கவே
வாய்விட்டுக் கதறியோட
அந்தணர்களிருடி முனி துதிசெய்மெய்க்கடவுளே
யண்ணலே யுனைநம்பினேன்
அரியரன் புத்ரனே படவியாளரசனே
யடியவர்க் கருள்புரிவையே 9

காரோங்கி மழைபொழிய செங்நெலுங் கன்னல்
கதித்துமிக வோங்கி விளைய
கலைபுணரு மந்தணர் நால்வகைச் சாதியுங்
களிகொண் டிருந்துவாழ்க

பாரோங்கு மன்னவர்கள் செங்கோல் தழைக்கவிப்
பாமாலை பாடுகவெனப்
பரிசளித்திடு சாமிகண்ணு படையாட்சியும்
பரமனருள் பெற்றுவோங்க
சீரோங்கு புலவர்முன் சிற்றறிவிக்கவிதை
செப்பினேன் பஞ்சநாதன்
சீர்தளைக ளீரைந்து குறையிருந்தாலுமே
தேவே பொருத்தருளவே
வாரோங்கு பூரணி புட்கலை மணாளனே
வாரணத் துவசநாதா
வையங் காக்கின்ற ஐய்னாரப்பனே
வரமெனக் கருள் புரிவையே 10

முற்றிற்று